Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JULY 13, 2023

வியாழக்கிழமை ஜூலை 13, 2023 | ஒளி: 09 கதிர்: 039 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ | FREE



# “எங்கட காணியை விட்டு எழும்பி போங்கோ; பிஸ்கட் சாப்பிடுவோம்”

## கடற்படையினரிடம் பொதுமக்கள் கோஷம்

**நிதர்ஷன் வினோத்**

யாழ்ப்பாணம், மண்டைதீவு பகுதியில் கடற்படையினரின் காணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கைக்கு எதிராக, பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2




# ஒகஸ்ட் 2 முதல் செயன்முறை பரீட்சை

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தர பரீட்சையின் சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியல் ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## சுவீடனில் புனித குர்ஆன் எரிப்பு:

# பாக். பிரேரணைக்கு இலங்கை ஒத்துழைப்பு?

சுவீடனில் புனித குர்ஆன் எரிக்கப்பட்டமை குறித்து பாகிஸ்தான் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில், ‘இது சர்வதேச சட்டத்தை மீறும் செயல்’ ஆகும் என்று பிரேரணை சமர்பித்துள்ளதாகவும் வியாழக்கிழமை (13) ஜெனீவாவில் இதுகுறித்து கவனம் செலுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அங்கத்தவர் என்ற வகையில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “முன்னேற்றம் காட்டாத அதிகாரிகள் குறித்து

# முடிவுகளை எடுக்க தயங்க மாட்டேன்”



அரசியல் செல்வாக்கால் மட்டும் பல நிறுவனங்கள் அழிக்கப்படவில்லை; அதிகாரிகளின் வாக்குவாதத்தாலும் அழிக்கப்படுகின்றன என்று தெரிவித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, முன்னேற்றம் காட்டாத அதிகாரிகள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கத் தயங்கப் போவதில்லை என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# மயக்க மருந்துகள் இன்று கிடைக்கும்

பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்திய இரு மயக்க மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த சுகாதார அமைச்சு,

தொடர்ச்சி P2




## வரிக் கோப்புகள் 5 இலட்சம் இருந்தாலும்

# 31,000 பேரே வரி செலுத்துகின்றனர்

வரியை அறவிடுவதை முறைமைப்படுத்த உண்ணாட்டர சிறைச் சட்டத்தை திருத்துவதற்கும், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவை இரத்துச் செய்வது தொடர்பிலும் நீதி அமைச்சருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிக திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# தமிழ்த் தேசிய கட்சிகளும் மோடிக்கு கடிதம் எழுதின

**எம்.றொசாந்த்**

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காக தயாரித்த கடிதத்தில் சில கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்ட நிலையில் கடிதம் இந்திய உயர்ஸ்தானிகரிடம் இன்று (13) கையளிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

## ஹெரோயின் கொண்டு சென்ற

# குடும்பஸ்தருக்கு மரணதண்டனை

**க. அகரன்**

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி விற்பனைக்காக 1 கிலோ கிராம் 135 கிராம் தூய்மையான ஹெரோயின் போதைப் பொருளை கொண்டு சென்ற குடும்பஸ்தரை, குற்றவாளியாக இனங்கண்ட வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், மரணதண்டனை விதித்து புதன்கிழமை (12) தீர்ப்பளித்தார்.

தொடர்ச்சி P2



## ஊசி ஏற்றப்பட்டதும்

# உடல் நீலமாகி யுவதி மரணம்

**ஷேன் செனவிரத்ன**

பேராதனை போதனா வைத்தியசாலைக்கு வயிற்று வலி காரணமாக சிகிச்சை பெற வந்த 21 வயதுடைய யுவதிக்கு, வைத்தியசாலையில் ஊசி போடப்பட்ட சில நிமிடங்களில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பேராதனை போதனா வைத்தியசாலையும் பொலிஸாரும்

தொடர்ச்சி P2

# காங்கேசன்துறை – கோட்டை ரயில் சேவை ஆரம்பமாகிறது



கொழும்பு கோட்டை முதல் காங்கேசன்துறை வரை வழமையான நேர அட்டவணைக்கமைய ரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையான ரயில் பாதை புனரமைப்பு பணிகளுக்காக கடந்த ஜனவரி மாதம் மூடப்பட்ட நிலையில், ரயில் போக்குவரத்து எதிர்வரும் சனிக்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட உள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## நல்லிணக்கத்தை உருவாக்கும் பணிகளை

# தற்காலத்திலேயே தீர்க்க வேண்டும்

### அதுவே ஜனாதிபதியின் நோக்கம் என்கிறார் சமன்

இலங்கையில் நல்லிணக்கத்தை உருவாக்கும் பணிகளை அடுத்த தலைமுறைக்கு கையளிக்காமல், தற்காலத்திலேயே அதனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க

தொடர்ச்சி P2

## 300 பொருட்களுக்கான

# இறக்குமதி கட்டுப்பாடுகள் விரைவில் நீங்கும்

இலத்திரனியல் பொருட்கள் உட்பட 300 க்கும் மேற்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் ஜூன் 9 ஆம் திகதி நீக்கப்பட்ட நிலையில், அடுத்த வாரம் மேலும் 300 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# உர மானிய கொடுப்பனவை நேரடியாக வழங்கத் தீர்மானம்

எதிர்வரும் பெரும் போகத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உர மானிய கொடுப்பனவுகள் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வழங்கப்படும் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# ‘அஸ்வெசும’ விண்ணப்பங்கள் ஒகஸ்ட் 01 முதல் கோரப்படும்



‘அஸ்வெசும’ நலன்புரித் திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியாதவர்களுக்கு அல்லது மேன்முறையீட்டு மனுக்களை சமர்ப்பிக்க முடியாதவர்களுக்கு ஒகஸ்ட் 01ஆம் திகதி முதல் மீண்டும் அந்த வாய்ப்பு வழங்கப்படும் என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அநுப பஸ்குவல் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஜகார்த்தா பயணமாகிறார் அமைச்சர் அலிசப்ரி



இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் நாளை வெள்ளிக்கிழமை (14) நடைபெறவுள்ள 30ஆவது ஆசியான் பிராந்திய மன்றத்தின் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜகார்த்தாவுக்கு பயணமாகவுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “முடிவுகளை எடுக்க தயங்க மாட்டேன்”

பத்தரமுல்லை அமைச்சின் கேட்போர் கூடத்தில் அரசாங்க தொழிற்சாலை தொழிற்சங்கங்களுடன் புதன்கிழமை (12) நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

தனது அமைச்சின் கீழுள்ள ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் தமது நிறுவனத்தின் வருடாந்த வருமானம் தொடர்பில் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்திய பின்னரும் நிறுவனங்களில் முன்னேற்றம் காட்டாத அதிகாரிகள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்க நான் தயங்கப் போவதில்லை என்றார்.

கொலன்னாவையில் அமைந்துள்ள அரச தொழிற்சாலைத் திணைக்களம் ஏறக்குறைய நூறு வருட வரலாற்றைக் கொண்டுள்ளது. பொலிஸ் அதிகாரிகளின் சீருடையில் பயன்படுத்தப்படும் உத்தியோகபூர்வ முத்திரைகள், ஏரிகளுக்கான வான் கதவுகள், வைத்தியசாலை உபகரணங்கள், கைவிலங்குகள், வாக்குப்பெட்டிகள் போன்றவை இத்திணைக்களத்தால் தயாரிக்கப்படுகின்றன.

ஆனால், திணைக்களத்தில் பணியாற்றும் சில உயர் அதிகாரிகளின் மோசமான நிர்வாகத்தால் திணைக்களம் தற்போது கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தொழிற்சங்க ஒன்றியம் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

## தற்காலத்திலேயே தீர்க்க வேண்டும்

நல்லிணக்கம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும், அந்தப் பிரச்சினைகள் நிவர்த்திக்கப்படும் பட்சத்தில் வருடம் ஒரு முறை ஜெனீவாவில் சாட்சிக் கூண்டில் நிற்க வேண்டிய அவசியம் இருக்காதெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்ற உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை பற்றி சிவில் சமூகத்தை தெளிவூட்டும் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதியின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் நோக்கத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெளிவுபடுத்தியதோடு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் பற்றியும் வெகுவாக ஆராயப்பட்டது.

## மயக்க மருந்துகள் இன்று கிடைக்கும்

அவற்றுக்கு பதிலாக இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் இன்றையதினம் (13) நாட்டை வந்தடையும் என்று தெரிவித்தது.

கடந்த காலங்களில் குறித்த மயக்க மருந்தைப் பயன்படுத்தி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பெண்கள் சிலர் உயிரிழந்தமையை அடுத்து, குறித்த மயக்க மருந்து தொடர்பில் சுகாதார தரப்பினர் தமது கவனத்தை செலுத்தியிருந்தனர்.

## ஊசி ஏற்றப்பட்டதும் உடல் நீலமான யுவதி மரணம்

பொத்தப்பிட்டிய, அலகல்ல பகுதியைச் சேர்ந்த சாமோதி சந்தீபனி ஜயரத்ன என்பவர் வயிற்றில் ஏற்பட்ட உபாதை காரணமாக, கடந்த 10ஆம் திகதி கெட்டப்பிட்டி அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அவர், செவ்வாய்க்கிழமை (11) காலை 10.00 மணியளவில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், தாதியொருவர் இரண்டு ஊசிகளை செலுத்தியுள்ளார். அதையடுத்து அவரது உடல் திடீரென நீல நிறமாக மாறி உயிரிழந்துள்ளார் என்று யுவதியின் தாயார் திருமதி மாயா இந்திராணி கூறுகிறார்.

## “எங்கட காணியை விட்டு எழும்பி போங்கோ; பிஸ்கட் சாப்பிடுவோம்”

அதன்போது, போராட்டத்தின் நிறைவில் போராட்டக்காரர்களுக்கு பிஸ்கட் மற்றும் குளிர்பானம் வழங்க வந்த கடற்படையினருக்கு பொதுமக்கள் கோஷம் எழுப்பி, கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதன்போது “எங்கட காணியை விட்டு எழும்பி போங்கோ; பிஸ்கட் சாப்பிடுவோம்” என கடற்படை அதிகாரியை பார்த்து காணி உரிமையாளர் தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் ஜே/07 கிராம சேவகர் பிரிவில் உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலிசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், புதன்கிழமை (12) அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக, மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் மண்டைதீவு கிழக்கு முத்துமாரியம்மன் கோவிலுக்கு அருகில் புதன்கிழமை (12) காலை 7.30 மணியளவில் ஒன்று கூடியவர்கள், நகர்ந்து சென்று வெலிசுமன கடற்படை முகாம் முன்பாக கூடி, எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது கடற்படை முகாம் முன்பாக பொலிஸார், கடற்படையினர், புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு இருந்தனர். கலகமடக்கும் கடற்படையினர் தயார் நிலையில் இருந்ததுடன், கடற்படையினர் போராட்டகாரர்களை அச்சுறுத்தும் வகையில் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை எடுத்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## 31,000 பேரே வரி செலுத்துகின்றனர்

இந்நாட்டில் தனிநபர் வருமான வரிக் கோப்புகள் 5 இலட்சம் காணப்பட்டாலும் அவற்றில் 31 ஆயிரம் பேரே வரி செலுத்துவதாக தெரிவித்த அவர், இந்நாட்டில் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் 105,000 பதிவு செய்யப்பட்டிருந்தாலும், இந்த நிறுவனங்களிலிருந்து 82% வரி வருமானம் 328 நிறுவனங்களிலிருந்தே கிடைப்பதாக சுட்டிக்காட்டினார்.

தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தால் கடன் வழங்கும் போது அடைந்திருக்க வேண்டிய விடயங்களான நாட்டின் பணவீக்கம், நாட்டின் கையிருப்பு அளவு, அரசாங்க வருமானம் தொடர்பான இரண்டாவது மீளாய்வு இடம்பெறும் டிசெம்பர் மாதத்தில் மேம்படுத்தப்பட்ட நிலையில் இருப்பது முக்கியமானது என குழுவின் தலைவர் இதன்போது வலியுறுத்தினார்.

அதனால் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு இலங்கை சுங்கத் திணைக்களம், மது வரித் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றுடன் தனது குழு தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான வசதிகளை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தலைவர் குறிப்பிட்டார்.

இந்த வரி வருமானங்களை சேர்ப்பதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு முடியாமல் போயுள்ளமை தொடர்பில் விரிவாகக் கருத்துத் தெரிவித்த குழுவின் தலைவர், வரி வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், குழு என்ற வகையில் அதில் சாதகமான தலையீட்டை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

தற்பொழுது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையான 904 பில்லியன் ரூபாய் தொகையை அறவிடுவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வரியை அறவிடுவதை முறைமைப்படுத்த உண்ணாட்டரசிறைச் சட்டத்தை திருத்துவதற்கும், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவை இரத்துச் செய்வது தொடர்பிலும் நீதி அமைச்சருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன், தற்பொழுது உள்நாட்டு இறைவரித் திணைக்களதில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தனது உதவியை முழுமையாக வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இங்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கருத்துத் தெரிவிக்கையில்,

தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனாக்குவதற்கு தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய குழுவால் வழங்கப்படும் ஆதரவுக்கு நன்றியை தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கு அரசாங்கத்தின் வரி வருமான இலக்கான 1.6 ட்ரில்லியன் ரூபாயை முதலாவது 6 மாதங்களில் 40% ஆகவும், இரண்டாவது 6 மாதங்களில் 60% ஆகவும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்ததாகவும், முதலாவது 6 மாதத்துக்கான இலக்கை தற்பொழுது அடைந்துள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், அடுத்த 6 மாதங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துவருவதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது குழுவின் தலைவர் குறிப்பிடுகையில், வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பொறிமுறையொன்று அமைப்பது அவசியமானது எனத் தெரிவித்தார்.

இந்நாட்டில் நிறுவனங்களைப் பதிவு செய்வதற்காக வழங்கப்படும் தகவல்கள் உண்மையானவை அல்ல என்பதால், வரி அறவிடும் போது சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுவதாக குழுவின் உறுப்பினர்களும் அதிகாரிகளும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், இலங்கை சுங்கம், மது வரித் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்த டிஜிட்டல் தகவல் கட்டமைப்பொன்றை விரைவாக தயாரிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் நாட்டின் தனிநபர் வரிக் கோப்புகள் மீள் பதிவு செய்யும் அவசியம் தொடர்பிலும் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

## காங்கேசன்துறை – கோட்டை ரயில் சேவை ஆரம்பமாகிறது

இந்திய கடனுதவியின் கீழ் 33 பில்லியன் ரூபாய் செலவில் 62 கிலோ மீட்டர் நீளமான இந்த ரயில் பாதை புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்டுள்ள இந்தப் பாதையில் மணித்தியாலத்துக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் ரயில் பயணிக்க முடியும் என்பதுடன், யாழ்ப்பாணம் கொழும்புக்கு இடையிலான ரயில் சேவைகளுக்கான ஆசன முற்பதிவுகளும் ஆரம்பிக்கப்பட உள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## இறக்குமதி கட்டுப்பாடுகள் விரைவில் நீங்கும்

இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 1,216 ஆக குறைக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக சுமார் 4 ஆயிரம் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் எவ்வாறாயினும், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அவர்களால் தன்னிச்சையான முடிவுகளை எடுக்க முடியாது என்றும், கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட நல்ல பணிகளை தவிர்க்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

அனைத்து முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் பரிசீலிப்பதாகவும், ஆனால் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து இலங்கை மத்திய வங்கியின் தீர்மானத்தின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## உர மானிய கொடுப்பனவை நேரடியாக வழங்கத் தீர்மானம்

ஒரு ஹெக்டேர் நெற்செய்கைக்காக விவசாயிகளுக்கு 20 ஆயிரம் ரூபாயும், உரம் கொள்வனவு செய்வதற்கு இரண்டு ஹெக்டேருக்கு 40 ஆயிரம் ரூபாயும் வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் தீர்மானித்த நிலையில், அமைச்சரவையும் இந்த முன்மொழிவுக்கு அனுமதி அளித்துள்ளது.

விவசாயிகளுக்கு சிறு போகத்துக்கான உரங்களை கொள்வனவு செய்வதற்கு வவுச்சர்கள் வழங்கப்படுகின்றன.

சிறு போகத்துக்கான உர இருப்புகளை கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளுக்கு 11 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

நாடு முழுவதும் உள்ள 550 ஆயிரம் விவசாயிகளுக்கு இந்த மானியத்தை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஓகஸ்ட் 2 முதல் செயன்முறை பரீட்சை

இருப்பினும், மேற்கத்திய இசைக்கான கேட்டல் பரீட்சை ஓகஸ்ட் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான, நடைமுறைப் பரீட்சைகள் கடந்த வருடங்களில் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு முறைகளின் அடிப்படையில் நடத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பாடசாலை பரீட்சார்த்திகள் மற்றும் நடைமுறைப் பரீட்சைக்கு வரும் தனியார் விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் உரிய நேரத்தில் தபால் மூலம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், விண்ணப்பதாரர்கள் மேலதிக தகவல்களுக்கு பரீட்சைகள் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1911 அல்லது 011 2 784208, 011 2 784537 அல்லது 011 2 786616 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## பாக். பிரேரணைக்கு இலங்கை ஒத்துழைப்பு

இரத்தினபுரி புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை செவ்வாய்க்கிழமை (11) பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி, “மதத்தைப் பின்பற்றும் உரிமை தொடர்பான முழு கருத்தியலும் தற்போது சவாலுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளது. அண்மையில் சல்வான் மோமிகா என்பவர், சுவீடனில் உள்ள துருக்கி தூதரகத்துக்கு முனபாக, குர்ஆனை எரிக்க அனுமதி கோரி நீதிமன்றத்தை நாடினார். பொலிஸார் அதற்கு அனுமதி மறுத்தாலும் அது, கருத்து தெரிவிக்கும் உரிமை என்று உயர்நீதிமன்றம் அறிவித்திருந்தது.

மதச் சுதந்திரத்தின் அடிப்படையில் பொலிஸார் செயற்பட்டார்கள். அது கருத்து தெரிவிக்கும் உரிமை என்று உயர்நீதிமன்றம் அறிவித்தது. புனித குர்ஆன் எரிக்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சுவீடனுக்கு அனைத்து நாடுகளாலும் அழுத்தம் விடுக்கப்பட்டது.

அனைவரும் கண்டனம் தெரிவித்தனர் என்றார்.

## ஜகார்த்தா பயணமாகிறார் அமைச்சர் அலிசப்ரி

ஆசியான் பிராந்திய மன்றம் என்பது 1994 ஆம் ஆண்டு தாய்லாந்தில் தொடங்கப்பட்ட ஆசிய-பசிபிக் பிராந்தியத்தை மையமாகக் கொண்ட பாதுகாப்பு உரையாடல் பொறிமுறையாகும்,

பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் செழுமைக்கான சவால்களை மன்றம் அங்கிகரிக்கும் அதே வேளையில் அனைத்து பங்குதாரர்களுக்கும் பயனளிக்கும் திறந்த மற்றும் உள்ளடக்கிய உரையாடல் மூலம் கூட்டாக பிராந்திய மேம்பாடு மற்றும் செழிப்பை மேம்படுத்த முயல்கிறது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் ஜகார்த்தா விஜயத்தின் போது, இருதரப்பு கலந்துரையாடல்களுக்காக 30 ஆவது மன்றத்தில் பல சகாக்களை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

## தமிழ்த் தேசிய கட்சிகளும்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில்டு இந்திய அரசாங்கம் தமிழர் தரப்பு விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி குறித்த கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நான்கு கட்சிகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் புதன்கிழமை (12) கூடி குறித்த கடிதத்தில் கையொப்பமிட்டனர்.

கடிதத்தில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரனும், புளொட் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், ஈ.பி.ஆர். எல்.எப். சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும், ஜனநாயக போராளிகள் கட்சி சார்பில் வேந்தனும் கையொப்பமிட்டனர்.

## ‘அஸ்வெசும’ விண்ணப்பங்கள் ஓகஸ்ட் 01 முதல் கோரப்படும்

நலன்புரி அரசிலிருந்து தொழில் முனைவோர் அரசை நோக்கி, இலங்கையை கொண்டு செல்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம் என்றும் ‘அஸ்வெசும’ வேலைத்திட்டத்தின் இறுதி இலக்கு, வலுவான தொழில்முனைவோர் வலையமைப்பை உருவாக்குவதே என்றும்

2048ஆம் ஆண்டுக்குள் வறுமையற்ற நாட்டை உருவாக்குவதற்குப் பதிலாக அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதே ‘அஸ்வெசும’ வேலைத்திட்டத்தின் இறுதி இலக்கு எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில், செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

1.2 மில்லியன் மக்களை உற்பத்திப் பொருளாதாரத்துடன் இணைத்து அவர்களை வலுவூட்டும் திட்டம் இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## குடும்பஸ்தருக்கு மரணதண்டனை

விதித்து புதன்கிழமை (12) தீர்ப்பளித்தார்.

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 திகதி, வவுனியா பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ தலைமையில் பொலிஸார், யாழில் இருந்து கொழும்பு சென்ற பஸ்களை சோதனையிட்டபோது, குடும்பஸ்தர் வைத்திருந்த பையில் ஹெரோயின் கண்டு பிடிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் ஒரு கிலோ கிராம் 135 கிராம் நிறை உடைய கலப்படம் அற்ற தூய ஹெரோயின் என தெரியவந்தது. வவுனியா நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்று பிணையில் விடுவிக்கப்பட்டுருந்தார்.

தூய ஹெரோயினை வைத்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதால் குறித்த நபருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

# மகனை இலங்கைக்கு வர அனுமதிக்கவும்

### சாந்தனின் தாய் ஜனாதிபதிக்கு கடிதம்

எம். றொசாந்த்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 30 ஆண்டுகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட சாந்தனை, இலங்கை வருவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கோரி, சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் செவ்வாய்க்கிழமை (11) கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் பணிமனை ஊடாக, ஜனாதிபதிக்கான கடிதமும் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் ஊடாக வெளிவிவகார அமைச்சருக்கான கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற சாந்தன் உள்ளிட்டவர்களை, சென்னை உயர்நீதிமன்றம் 2022ஆம் ஆண்டு நவம்பரில் விடுதலை செய்திருந்தது. தன்னை இலங்கைக்குள் வர அனுமதிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அண்மையில் கடிதம் ஒன்றை சாந்தன் அனுப்பியிருந்தார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.





### பிரியாவிடை

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதி உயர்ஸ்தானிகராக வினோத் குரைன் ஜேக்கப், உத்தியோகபூர்வ பிரியாவிடை சந்திப்புக்காக, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவை கடற்படைத் தலைமையகத்தில் புதன்கிழமை (12) சந்தித்தார்.

## கொக்குவில், சத்துருகொண்டான், தன்னாமுனை வீதிகள் திறந்துவைப்பு



கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில், உலக வங்கியின் நிதி உதவியுடன் TCAMP - PRDP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 72 மில்லியன் ரூபாய் செலவில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்ட கொக்குவில், சத்துருகொண்டான், தன்னாமுனை வீதிகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, நேற்று (12) மக்கள் பாவனைக்கு சம்பிராய பூர்வமாக திறந்து வைத்தார்.

மாகாண வீதி அபிவிருத்தி செயலாளர் யூ. மன்சூர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், விசேட அதிதியாக வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ. பிரசாந்தன் கலந்துகொண்டிருந்தனர்.

## மார்பகத்தை தொட்ட அதிபருக்கு ஒரு வருட கடூழிய சிறை

விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும் போது, 12 வயது பாடசாலை மாணவியின் மார்பகத்தை தொட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக நீதிமன்றில் குற்றம் சாட்டப்பட்ட அதிபர் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதையடுத்து அவருக்கு ஐந்து வருடம் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பிரதான நீதவானும் மாவட்ட நீதிபதியுமான நாலக சஞ்சீவ ஜயசூரியவே மேற்கண்ட உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு குற்றஞ்சாட்டப்பட்ட அதிபருக்கு உத்தரவிட்டார்.

2016ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்தில் 12 வயது சிறுமியின் மார்பகத்தைத் தொட்டு, இந்த குற்றச் செயலைச் செய்ததற்காக அதிபருக்கு எதிராக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.



### தாந்தாமலை கொடியேற்றம்

வரலாற்று பிரசித்தி பெற்ற தாந்தாமலை ஸ்ரீ முருகன் கோவிலின் வருடாந்த கொடியேற்றம் நேற்று புதன்கிழமை (12) சிறப்பாக கோவிலின் பிரதமகுரு சச்சிதானந்தம் தலைமையில் பூசை வழிபாடுகளோடு, பக்த அடியார்கள் குடைசூழ சிறப்பாக ஆரம்பமானது. எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி, புதன்கிழமை காலை ஆறு மணிக்கு, தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் நிறைவுபெறும்.

வி.ரி சகாதேவராஜா

## இரவுநேர பொலிஸ் ரோந்தை பலப்படுத்தவும்

ஆ.ரமேஸ்

மலையகத்தில் பிரதான நகரங்களில் இரவு ஒன்பது மணிமுதல் விடியற்காலை வரை பொலிஸ் ரோந்து சேவையை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென வர்த்தகர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தலவாக்கலை நகரில் ஆறு கடைகள் உடைக்கப்பட்டு இடம்பெற்ற கொள்ளை சம்பவத்தை அடுத்தே இந்தக் கோரிக்கையை வர்த்தகர்கள் முன்வைத்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் பல பிரதான நகரங்களில், கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளை சம்பவங்கள் கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ளன.

இருந்தபோதிலும் இந்தக் கொள்ளை சம்பவங்களில் ஈடுப்பட்டவர்களில் எத்தனை பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்பது தெரியாது எனவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தலவாக்கலை நகரில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் நகரில் பொலிஸார் ரோந்து சேவையில் இருந்தார்களா என்பது தொடர்பில் சந்தேகமாக உள்ளது. இது குறித்து நுவரெலியா பொலிஸ் தலைமையகம் விசாரணைகளை நடத்த வேண்டும் எனவும் வர்த்தகர்கள் கோரியுள்ளனர்.

கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழி அகழ்வு

## சர்வதேச நியமங்களுக்கு அமைய இடம்பெற வேண்டும்

சண்முகம் தவசீலன், செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளில், சர்வதேச கண்காணிப்பாளர்கள் அல்லது சர்வதேச நிபுணத்துவம் பெற்றவர்களை கொண்டு, சர்வதேச நியமங்களுக்கு அமைய அகழ்வு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்று (12) கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறிப்பாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளைத் தேடி வருகின்ற நிலைமையில், இறுதி யுத்தத்தில் சரணடைந்தவர்களுடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்ற, கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழியின் அகழ்வு பணிகள், சர்வதேச நியமங்களுக்கு முரணாக இடம்பெற்று வருகின்றன. எனவே சர்வதேச நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு, சர்வதேச



கண்காணிப்புக்கு மத்தியில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குறித்த உடலங்கள் யாருடையவை என்பது தொடர்பாக கண்டறியப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## டிலான் அலஸின் கருத்து புலிப்பூஞ்சாண்டி

### போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவர்

க. அகரன்

இலங்கையில் விடுதலைப் புலிகள் மட்டும்தான் தடை செய்யப்பட்ட அமைப்பாக காணப்படுகின்றார்களே ஒழிய, விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்களோ, மாவீரர்களோ தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ளடக்க முடியாது; சட்டரீதியாகவும் தண்டிக்க முடியாது. அதன் அடிப்படையில்தான் மரணித்தவர்களுக்கு சட்ட விலக்கு இருக்கின்றது என போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவர் அரவிந்தன் தெரிவித்தார்.



வவுனியாவில் திறக்கப்பட்ட போராளிகள் நலன்புரி சங்க அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் புகைப்படங்களை வைத்து அஞ்சலி செலுத்தியது தொடர்பாக, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விசாரணைகளை முன்னெடுக்குமாறு தெரிவித்துள்ளமைக்கு எதிராக, நேற்று (12) குறித்த சங்கத்தில் நடைபெற்ற ஊடகவியாலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

போராளிகள் நலன்புரி சங்கம் ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணத்தை பொலிஸ், இராணுவத்துக்கு தெரிவித்திருக்கிறோம். புனர்வாழ்வு வழங்கப்பட்ட போராளிகளுக்கு தொழில் வாய்ப்புகளோ, வாழ்வாதாரங்களோ அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை என்பதை பலதடவைகள் சுட்டிக்காட்டி இருந்தோம்.

எங்களது போராளிகளில் பலர், இன்று பிச்சை எடுக்கின்ற நிலையில் காணப்படுகின்றார்கள். இந்நிலையை மாற்றும் நோக்கத்துக்காகவே போராளிகள் நலன்புரி சங்கம் உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படையில் கடமைகளை ஒழுங்குபடுத்தி, வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

டிலான் அலஸின் கருத்து, புலிப்பூஞ்சாண்டி காட்டி சிங்கள மக்களை ஏமாற்றுகின்ற ஓர் அரசியல் நாடகமாகும். ஆகவே, இவர்கள் எங்களது குரல்வளையை நெரிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளக்கூடாது என்றார்.

## சமாதான நீதவானாக நியமனம்

ஹஸ்பர்



கிண்ணியா, துறையடி வீதியைச் சேர்ந்த முஹம்மது அலி முஹமட், அகில இலங்கை சமாதான நீதவானாக திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதவான் எம். கணேஷராஜா முன்னிலையில் திங்கட்கிழமை (10) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், கிண்ணியா அந் நஜாத் மகா வித்தியாலயம், குறிஞ்சாக்கேணி அறபா மகா வித்தியாலயம், அலிஹார் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவராவார். சமூக சேவையாளராகவும் ஊடகவியலாளராகவும் இருந்துவரும் இவர், திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் உறுப்பினராகவும், கிண்ணியா பிரதேச செயலகத்தின் கலாசார அதிகார சபையின் உப செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

கிண்ணியா, கச்சக்கொடித்தீவைச் சேர்ந்த முஹம்மது அலி மற்றும் வல்கூஸ் உம்மா தம்பதியரின் மூன்றாவது புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாலிநகர் கொலைச் சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

### மல்லாவியில் தொடரும் 'இடியன்' கலாசாரம்

செ. கீதாஞ்சன்

மல்லாவி, பாலிநகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்ற இடியன் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை மல்லாவி பொலிஸார் கைது செய்து, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து, மூவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற முரண்பாடான நிலையை அடுத்து குறித்த சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இதன்போது, 23 வயதான மகேந்திரன் டிலக்சன் என்ற இளைஞர், வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

மல்லாவி, ஐயன்கன்குளம் போன்ற பொலிஸ் பிரிவுகளில் நாட்டுத் துப்பாக்கியான இடியன் துப்பாக்கியின் பாவனை அதிகரித்து காணப்படுகின்றது என்றும் காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தும் இத்துப்பாக்கியை இப்போது மனிதர்களை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்றும் இவ்வாறான சம்பவங்கள் தொடருமாக இருந்தால், பல மனித கொலைகள் இடம்பெற வாய்ப்புள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள். எனவே, பொலிஸார் இந்நிலைமையைக் கட்டுப்படுத்த இறுக்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

## துருக்கி யுவதிக்கு பாலியல் தொல்லை: கோப்ரல் கைது

தம்புள்ளை நோக்கிப் பஸ்ஸில் பயணித்த துருக்கி யுவதிக்கு, பாலியல் தொல்லை கொடுத்ததாக சந்தேகத்தின் பேரில் இராணுவ கோப்ரல் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மாத்தளை, மெல்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

மூன்று துருக்கிய யுவதிகளும் பாகிஸ்தானிய இளைஞரும் அடங்கிய குழுவொன்று கண்டியிலிருந்து தம்புள்ளை நோக்கி பஸ்ஸில் சென்று கொண்டிருந்த போது, சந்தேக நபர் தமக்கு அருகில் அமர்ந்திருந்த பெண் ஒருவரின் உடலை தடவியது விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானிய இளைஞன், நடத்துநர் மற்றும் பயணிகளின் உதவியுடன் சந்தேக நபரை பிடித்து, தம்புள்ளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சந்தேகநபர் தம்புள்ளை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# வருமான வரி ஏய்ப்போருக்கு எதிராக சட்டத்தை இறுக்குவது அவசியம்

சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளின் போது, அந்நிறுவனம் விதிக்கும் நிபந்தனைகளை அரசாங்கம் அமல்படுத்திக்கொண்டிருக்கின்றது. அதற்காக சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்கின்றது.

இரண்டாவது கட்டக் கடன் கிடைப்பதற்கு முன்னர், பல நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டிய தேவை உள்ளது. இல்லையேல் கடன்தொகையை பெற்றுக்கொள்வதில் அரசாங்கத்துக்கு சிக்கல் ஏற்படும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், செல்வந்தர்கள், நடுத்தர வர்க்கத்தினர், அன்றாடம் வாழ்க்கை நடத்துவோர் என மூன்று பிரிவுகளாக பிரித்துக்கொண்டால், எந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டாலும் செல்வந்தர்கள் சிக்கிக்கொள்வதே இல்லை. ஏனைய இரு பிரிவினர்களில் நடுத்தரப் பிரிவினர் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருக்கின்றனர்.

அன்றாட வாழ்க்கைக் கடத்துவோர், இரவு படுக்கைக்குச் செல்லும்போது, இன்றைய நாளை சமாளித்துவிட்டோமென பெருமூச்சு விடுவர். ஏதாவது கிடைத்தால் உண்டு மகிழ்ந்து இருப்பர்; கிடைக்காவிடின் அரைவயிறும் கால்வயிறுமாக அந்நாளை கடத்திவிடுவர்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் தீர்வு, நிரந்தரமானது அல்ல; பொருட்களின் விலைகள் குறைந்தாலும், சேவைகளின் கட்டணங்களில் மாற்றங்கள் இல்லை. இலங்கை ரூபாயின் பெறுமதி குறைகிறது. ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதி அன்றாடம் ஏறுமுகத்தில் செல்கின்றது. இது, இறக்குமதி பொருட்களின் மீதும், தங்கத்தின் மீதும் கடுமையான தாக்கத்தைச் செலுத்துகிறது.

ஏற்றுமதித்துறை பாதிக்கப்பட்டால், இலங்கை ரூபாயின் பெறுமதி குறைவடையும். ஆடைத்தொழில் துறையின் ஏற்றுமதி 28 சதவீதம் வீழ்ச்சியை கண்டுள்ளது. இதனால், ஆடைத்தொழில் துறையை நம்பியிருக்கும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

இதற்கிடையே அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக, மதுபானம் மற்றும் புகைப்பொருள் உள்ளிட்டவற்றின் விலைகளை அரசாங்கம் அதிகரித்துள்ளது. இது சிறந்த முடிவு என்றாலும், எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை திரட்டிக்கொள்ள முடியாவிடின், வேறு பொருட்களின் விலைகளில் கையை வைக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் அரசாங்கம் தள்ளப்படும்.

எனினும், வரி ஏய்ப்போருக்கு எதிராக அதிரடியான நடவடிக்கை எவையும் எடுக்கப்படவில்லை என்பது, தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டில் தனிநபர் வருமான வரிக் கோப்புகள் ஐந்து இலட்சம் காணப்பட்டாலும் அவற்றில் 31,000 பேரே வரி செலுத்துகின்றனர். வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் 105,000 பதிவு செய்யப்பட்டிருந்தாலும், 82% வரி வருமானம், 328 நிறுவனங்களில் இருந்தே கிடைக்கிறது என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

புதிய சட்டத்திருத்தங்களை கொண்டுவந்து, சாதாரண மக்களின் கழுத்தை இறுக்குவதை விடுத்து, வலைக்குள் சிக்கிக்கொள்ளாது சுகபோகங்களை அனுபவிக்கும் தரப்பினரிடம் இருந்தும் வரி ஏய்ப்போரிடம் இருந்தும் கிடைக்கவேண்டிய தொகையை உரிய முறையில் திரட்டிக்கொள்வதற்கு ஏதுவாக, சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதுடன் அவற்றை இறுக்கமாகவும் அமல்படுத்துவதே நாட்டுக்கு நல்லது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

விழிப்பும் உறக்கமும் ஒவ்வொரு நாளும் நடப்பதாகும். எனினும் உண்மையான விழிப்புநிலை எமக்கானதும் இந்த உலகத்துக்கானதுமாகும்.

எமக்காக மட்டும் வாழ்தல் வெறும் உறக்கத்துடன் மட்டும் சஞ்சரிப்பது மட்டுமேயாகும். கடமைகளைச் செய்யாதவன் விழித்தபடியும் உறங்கியபடியும், தான் பிறந்த இந்த உலகத்துக்கு எதுவும் செய்யாமல் வாழ்கின்றான். தாங்கும் பூமித்தாய்க்கு பாரமாக இருத்தல் ஆகாது!

பிறர் செய்யும் சேவைகளைப் பார்த்தாவது, தன்னைத்தான் உணரவேண்டும். சுறுசுறுப்பாக வேலைசெய்வதைவிட சந்தோசம் வேறொன்றும் இல்லை.

நிகழ்கால உழைப்பே வருங்கால வருமதியாகும். வினாடிப் பொழுதும் வீணாகத் தேயக்கூடாது. சின்ன வயதிலேயே கல்வியுடன் இணையவேண்டும். வாலிபம் வந்து கருமங்களைச் செய்யும்போது, நாம் பூமிக்கான சேவைகளுக்காக ஒரு பகுதியை ஒதுக்க வேண்டும்.

உயிர் பிரிந்தாலும் சேவை செய்பவன் மரணிப்பதில்லை. நற்பணி செய்பவர்களுக்கு கால வேறுபாடுகள் இல்லை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



### சிவனடிபாத மலையின் வழியிலுள்ள குளவிக் கூடுகளால் மக்கள் பீதியில்!

நல்ல தண்ணீர் நகரில் இருந்து, சிவனடிபாத மலைக்குச் செல்லும் பிரதான வீதியில் உள்ள நாகதீப பௌத்த விகாரையில் அமைக்கபட்டு உள்ள 50 அடி உயரமான புத்தர் சிலையின் பல பகுதிகளில் பத்துக்கும் மேற்பட்ட குளவிக் கூடுகள் காணப்படுகின்றன.

தற்போது இப்பகுதியில் கடும் காற்று வீசுவதால், இங்கு காணப்படும் குளவிகள் கலைந்து, அப்பகுதிகளில் சுற்றுவதுடன் மீண்டும் அதே இடத்தில் கூடு கட்டி கொண்டுள்ளன என அயல் பிரதேசங்களில் வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சிவனடிபாத மலைக்கு மாலை வேளையில் சென்று, காலை வேளையில் திரும்பி வரும் வழியில், எந்த நேரத்திலும் குளவிக் கொட்டுக்கு இலக்காகலாம் எனத் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி, அங்கு உள்ள குளவி கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

செ.தி பெருமாள்

தமிழ் மக்களின் ஆணையை

# தமிழ்க் கட்சிகள் காட்டிக்கொடுக்கக் கூடாது



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய கட்சிகள், இந்தியாவுக்கு கடிதம் எழுதும் படலத்தை மீண்டும் ஆரம்பித்து இருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை அடுத்த வாரம் மேற்கொள்ள உள்ளார். அதை முன்னிட்டே, இம்முறை தமிழ்க் கட்சிகளால், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதங்கள் எழுதப்படுகின்றன.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வை உறுதி செய்வதற்கு இந்தியா, 'மூத்த அண்ணா'வாக நின்று தன்னுடைய பங்கை வழங்க வேண்டும் என்பதே, குறித்த கடிதங்கள் எழுதப்படுவதன் அடிப்படை ஆகும்.

வழக்கமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஓர் அணியாக நின்று கடிதங்களை எழுதுவது வழக்கம். கடந்த ஆண்டும்கூட, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவதற்கான அழுத்தங்களை, இலங்கைக்கு வழங்க வேண்டும் என்று கடிதமொன்று புதுடெல்லிக்கு அனுப்பப்பட்டது.

ஆனால், தற்போது தமிழ்த் தேசிய கட்சிகள், மூன்று அணிகளாக நின்று கடிதங்களை அனுப்புகின்றன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்கெனவே, தன்னுடைய கடிதத்தை யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவரிடம் கையளித்துவிட்டது. அதில், 13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதை சுட்டிக்காட்டி உள்ளது. அத்தோடு, ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களுக்கான தீர்வைக் காண முடியாது. ஆகவே, பிரித்தெடுக்க முடியாத சுயநிர்ணய உரிமையை வழங்கும் அதிகாரப் பகிர்வே தீர்வாக இருக்க முடியும் என்றும், அதற்கு இந்தியா தன்னுடைய பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் முன்னணி கோரியிருக்கின்றது.

வழக்கமாக இந்தியாவுக்கு கடிதம் எழுதும் படலத்தை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பே முன்னெடுக்கும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட சமயத்தில், கூட்டமைப்பு பிளவுபட்டுவிட்டது. அதனால், கடிதத்தை எழுதுவது என்ற விடயத்தை புளொட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் உள்ளடங்கிய ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆரம்பித்து வைத்தது.

வழக்கமாக, 13ஆவது திருத்தத்தை முழுவதுமாக நிறைவேற்ற வேண்டும் என்ற, இந்தியாவை குளிர்விக்கும் கோரிக்கையை விடுப்பது தொடர்பில் டெலோ, புளொட், ஈ.பி.ஆல்.எல்.எப் என்பன ஆர்வத்தோடு இருந்து வந்திருக்கின்றன. இம்முறையும், அந்த அணியின் கடிதம், 13ஆவது திருத்தத்தை முழுவதுமாக அமல்படுத்துவதற்கான அழுத்தத்தை, இலங்கைக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே கடிதத்தை வரைந்தன.

அந்தக் கடிதத்தில், கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோரின் கையொப்பங்களை பெறும் முயற்சிகளையும் முன்னெடுத்தன. ஏனெனில், இன்னமும் தமிழ்த் தேசிய அரசியலில் சம்பந்தனே மூத்த முக்கிய தலைவர். அவரை புறந்தள்ளிக் கொண்டு வரையப்படும் கடிதங்கள், இராஜதந்திர ரீதியில் அவ்வளவு முக்கியத்துவம் பெறப்போவதில்லை என்பது, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினருக்கு தெரியும். அதன்பொருட்டும் சம்பந்தனின் கையொப்பம் அவர்களுக்கு அவசியமானது.

இதையடுத்து, தமிழ்த் தேசிய கட்சிகள் என்ற பொது அடையாளத்தோடு கடிதத்தை வரைவது என்ற கட்டத்துக்கு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் வந்திருக்கலாம். ஏற்கெனவே, அந்த அணிக்குள், வவுனியாவின் சீனித் தொழிற்சாலையை அமைப்பது தொடர்பில் டெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், அந்தக் கட்சியின் இன்னொரு முக்கியஸ்தரான குருசுவாமி சுரேந்திரனும் முறையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதான குற்றச்சாட்டு உண்டு.

குறிப்பாக, அந்த அணிக்குள் இருக்கும் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன, செல்வம் அடைக்கலநாதன் பொறுப்பற்று செயற்படுவதாக குற்றஞ்சாட்டுகின்றன. ஏன், டெலோவுக்குள்ளேயே செல்வத்தையும் சுரேந்திரனையும் தமிழ் மக்களின் நலனுக்கு எதிராக செயற்படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

சீனித் தொழிற்சாலை அமைந்தால், அது இன்னொரு மகாவலி திட்டம் போன்று சிங்களக் குடியேற்றங்களை வவுனியாவுக்கு உள்ளும் முல்லைத்தீவுக்கு உள்ளும் அதிகரிக்கப்பண்ணும் என்பது, தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு. பொது அமைப்புகளும் அதையே கூறுகின்றன.

குறித்த சீனித் தொழிற்சாலை, வவுனியாவில் அமைக்கப்படுவது பொருத்தமில்லாத செயற்பாடு என்று 2016ஆம் ஆண்டே வடக்கு மாகாண சபை நிராகரித்துவிட்ட திட்டமாகும். அப்படிப்பட்ட நிலையில், செல்வமும் சுரேந்திரனும் அந்தத் திட்டத்தை எப்படியாவது கொண்டுவந்துவிட வேண்டும் என்று நிற்பது, அவர்களின் பின்னணியை சந்தேகம் கொள்ள வைத்திருக்கின்றது.

அதனால், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமல்படுத்தக் கோரும் இந்தியாவுக்கான கடிதத்தில் சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோரின் கையெழுத்துகளை, எதிர்கால தேர்தல் கூட்டுக்கான ஆரம்பமாக வைத்துக் கொள்ளலாம் என்பது அந்த அணியின் நோக்கமாகும்.

ஆனால், சம்பந்தன் அந்த வலைக்குள் விழவில்லை. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் கடிதத்தில், தன்னால் கையெழுத்திட முடியாது என்று திரும்பி அனுப்பிவிட்டார். அத்தோடு, 13ஆவது திருத்தம் என்பது, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வல்ல; அதைத் தாண்டி, சமஷ்டிக் கட்டமைப்பே தமிழ் மக்களின் தொடர் கோரிக்கை. அதனை வலியுறுத்தும் திருத்தங்களுடன் கூடிய கடிதத்தை அவர், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினருக்கு அனுப்பி, அதில் கையெழுத்திட வலியுறுத்தியிருக்கிறார். அதில், நீங்கள் கையெழுத்திட்டால், அதை இந்தியாவுக்கு தான் அனுப்பி வைப்பதாக அறிவித்திருக்கின்றார்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் ஏமாற்றமடைந்து இருக்கிறார்கள். அத்தோடு, வழக்கமாக 13ஆவது திருத்தத்தை தீர்வாக வலியுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்புகளின் கருவிகளாக செயற்படும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினருக்கு, தங்களை ஆட்டுவிக்கும் தரப்புகளின் நிலைப்பாடுகளுக்கு எதிரான கடிதத்தில் கையெழுத்திடுவதிலும் சிக்கலாக இருக்கலாம். அதனால், அவர்களின் 13ஆவது திருத்தத்தை அமல்படுத்தக் கோரும் கடிதம், தனித்து அனுப்பப்பட இருக்கின்றது.

தமிழரசுக் கட்சியும், அதன் பெருந்தலைவரான சம்பந்தனும் கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற பின்னடைவால் விடயங்களை இன்னும் கனதியோடு அணுக எத்தனிக்கின்றனர். 13ஆவது திருத்தம் என்ற தமிழ் மக்களால் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு வந்த விடயத்தை முக்கிய பேசுபொருளாக்கினால், அது தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து தமிழரசுக் கட்சியை அகற்றிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்கு பின்னர் மஹிந்த ராஜபக்‌ஷவே, '13பிளஸ்' என்று கூறியிருக்கின்ற நிலையில், 13ஆவது திருத்தத்தை அமல்படுத்தக் கோருவது இன்னும் பின்னடைவைச் சந்திக்க வைக்கும் செயலாகும்.

ரணில் ஜனாதிபதியாக பொறுப்பேற்று ஒரு வருடமாகிவிட்டது. வழக்கமாக, இலங்கையில் அதியுச்ச பதவிகளில் அமரும் நபர்கள், முதல் பயணமாக புதுடெல்லிக்கே செல்வார்கள். அது, ஒரு பாரம்பரிய நடைமுறைபோல கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

ஆனால், ரணில் ஜனாதிபதியாகி ஒரு வருடத்துக்குப் பின்னர்தான், புதுடெல்லி அவரை அழைத்திருக்கின்றது. அது, இலங்கையின் அரசியல் நகர்வுகளில் இந்தியாவுக்கு இருக்கும் பிடிமானத்தையும் அதிருப்தியையும் ஒருமித்து காண்பிக்கும் செயலாகும்.

அப்படியான நிலையில், இந்தியாவுக்கு தமிழ்த் தரப்புகள் எழுதும் கடிதம் அல்லது கோரிக்கைகள், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அடைவதற்கான ஏதுகைகளைக் கொண்டிருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், அதன் ஒரு பகுதியையாவது அடைவதற்கான வாய்ப்புகளைப் பெற முடியும். அப்படியான நிலையில், 13ஆவது திருத்தத்தை அமல்படுத்த வேண்டும் என்று கோருவது, எந்தவித அரசியல் சாணக்கியத்தனத்திலும் வராது. இதனை, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் யாரின் விருப்பத்தை நிறைவேற்ற செய்கிறார்கள் என்பதை, தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

13ஆவது திருத்தம் என்பது, இலங்கை - இந்திய ஒப்பந்தங்களின் பிரகாரம் தமிழ் மக்களிடம் திணிக்கப்பட்ட குறைப்பிரசவம். அதிலிருந்து கூட காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்களை, தென் இலங்கை பிடுங்கிக் கொண்டு விட்டது. அப்படிப்பட்ட ஒரு திருத்தத்தால் தொடர்ந்து பாதிக்கப்படும் தரப்பான தமிழ் மக்களுக்கு எந்தவித பயனும் இல்லை.

13ஆவது திருத்தம் இலங்கை மீதான இந்தியாவின் ஓர் அடையாளமாக இருக்கலாம். அதைக் காப்பாற்ற வேண்டியது புதுடெடில்லியின் பெரு விருப்பம். ஆனால், அது ஒருபோதும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இல்லாத போது, அதைப் பிடித்து தொங்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை.

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான அனைத்துத் தேர்தல்களிலும் சமஷ்டித் தீர்வு குறித்த கோரிக்கைகளுக்கான ஆணையை வழங்கி இருக்கிறார்கள். அது, கூட்டமைப்பாக தேர்தலில் களம் கண்டவர்களாக இருந்தாலும், முன்னணி அடையாளத்தோடு வந்த காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும், சி.வி விக்னேஸ்வரன் அணியாக இருந்தாலும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் சமஷ்டிக் கோரிக்கையின் பெயரால் அளிக்கப்பட்டவை.

ஏன், இன்று அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் அறிக்கையும் கூட, 'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்பதுதான். சமஷ்டிக் கோரிக்கையை, 'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்ற அளவுக்கு யாராலும் எளிதாக விளங்கப்படுத்திவிட முடியாது.

அப்படிப்பட்ட நிலையில், தமிழ் மக்களின் ஆணை என்பது சமஷ்டிக் கோரிக்கைகளுக்கானது. அதில், நின்று இயங்க வேண்டியது தமிழ்க் கட்சிகளின் கடமை. அதை மறந்து, யாரினதும் கருவிகளாக நின்று செயற்பட முனைவது, மக்களின் ஆணையைக் காட்டிக் கொடுக்கும் செயலாகும்.



# மனிதனும், மன அழுத்தமும்



ஜெயக்காந்தன் கனிஷ்ரா
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

தற்கால அவசர உலகில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் மனஅழுத்தம் (Depression) பாதிக்கின்றது. இந்த வார்த்தையை முதன்முதலில் Hans selye என்ற உட்சுரப்பிரப்பியலாளர் பயன்படுத்தினார். Depression என்ற வார்த்தையானது 1930களில் பயன்படுத்தத் தொடங்கினாலும், அண்மைக் காலங்களிலேயே இதன் பயன்பாடு அதிகமாக புளக்கத்துக்கு வந்துள்ளது.

குறிப்பாக, வளர்ந்த நாடுகளில் 70% மக்கள் தொடர்ந்து மன அழுத்தத்துடன் காணப்படுவதாகவும் 90% அதிகமானோர் மாதத்துக்கு பலமுறை மன அழுத்தத்தால் பாதிப்படைவதாகவும் ஆய்வுமுடிவுகள் கூறுகின்றன.

தற்காலத்தில் மாணவர்களுக்கு அதிகபடியான கல்விச்சுமை, அதிகமான வெளிக்கள செயற்பாடுகள், கற்றலுக்கு போதியளவு பணமின்மை, சரியான உணவின்மை, உரிய நேரத்தில் உறக்கமின்மை போன்ற காரணங்களாலும் பணியாளர்களுக்கு வேலைச்சுமை, வேலைத்தளங்களில் ஏற்படுகின்ற அழுத்தம் போன்றவற்றினாலும் பெரியவர்களுக்கு தம்மோடு மனம் திறந்து உறவாட உறவுகள் இன்மை, ஆழ்மனதின் ஏக்கங்கள் போன்ற பல காரணங்களாலும் மன அழுத்தங்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாறான காரணங்களால், ஒரு நபருக்கு மன அழுத்தம் அதிகரிக்கும் போது, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து விடுகின்றது. இதனால் பலநோய்த் தொற்றுகளுக்கு ஆளாவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

மன அழுத்தத்தால் இரத்த ஓட்டம் அதிகமாகும். மனம் திரும்ப பழைய நிலைக்கு வந்துவிட்டால், சரியாகிவிடும். ஆனால், தொடர்ந்து ஒரு நபர் ஒரே விடயத்தாலோ அல்லது ஒரே அளவில் மன அழுத்தத்தில் இருந்தாலோ, மாரடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. மன அழுத்தத்தால், நாளமில்லா அமைப்பு பாதிக்கப்படும். நாளமில்லா அமைப்பு உடலில் அதிக வேலை செய்கிறது. சிந்தனை, திசுக்களின் செயற்பாடுகள், மெட்டாபாலிஸம் இதனால் பாதிக்கப்படும்.

மன அழுத்தத்தின் அறிகுறிகளாக சரியான துக்கமின்மை, கோபம், எரிச்சல் அடைதல், தசைகளில் ஏற்படும் இறுக்க நிலைமை, அதிகமாக உணவுகளை உட்கொள்ளுதல், குறைவாக உண்ணுதல், தலைவலி, எதிலும் கவனம் செலுத்த முடியாத நிலைமை, மனச்சோர்வு, சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுதல், கவலையான உணர்வு போன்றவற்றை கூறலாம்.

**சண்டை போடும் போது மன அழுத்தம் அதிகமாகிறது. அதனால் சண்டை வருவதற்கான ஒவ்வொரு காரணத்தையும் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். ஒருவேளை சண்டை வந்துவிட்டால், அந்த நேரத்திலும் நிதானமாக சிந்தித்து செயற்பட முயற்சி செய்யுங்கள்**

அந்தவகையில், மன அழுத்தம் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

### யூஸ்ட்ரெஸ் மன அழுத்தம்:

இது நன்மை பயக்கும் மன அழுத்தமாகும். வலிமையால் ஏற்படும் மன அழுத்தமாக இருக்கலாம். யூஸ்ட்ரெஸ் என்பது மிதமான அழுத்தமாகும். இது சிக்கலை மிகவும் திறம்பட சமாளிக்க, உங்களை கட்டாயப்படுத்துகிறது. இந்த வகை மன அழுத்தம், உடலின் அனைத்து எதிர்வினைகளையும் உள்ளடக்கியது. இது ஒரு நபரை புதிய நிலைமைகளுக்கு அவசரமாக மாற்றியமைக்கிறது. இது விரும்பத்தகாத சூழ்நிலையைத் தவிர்க்க, சண்டையிட அல்லது மாற்றியமைக்க ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

### துன்பம் மன அழுத்தம்

இது தீங்கு விளைவிக்கும்/ அழிவு தரும் மன அழுத்தமாகும். உடலால் சமாளிக்க முடியாது. இந்த வகையான மன அழுத்தம், வலுவான எதிர்மறை உணர்ச்சிகள் அல்லது உடல் காரணிகளின் (காயம், நோய், அதிக வேலை) நீண்ட காலப்பாதிப்பால் உருவாகின்றது. துன்பம் வலிமையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது, ஒரு நபர், மன அழுத்தத்தை ஏற்படுத்திய சிக்கலை திறம்பட தீர்ப்பதில் இருந்து மட்டுமல்லாமல், முழுமையாக வாழ்வதையும் தடுக்கிறது.

### உணர்ச்சி மன அழுத்தம்

இது, மன அழுத்தத்துடன் கூடிய உணர்ச்சிகள் (கவலை, பயம், கோபம், சோகம்) உடலில் எதிர்மறையான மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

வெளிப்பாட்டின் கால அளவைப் பொறுத்து, மன அழுத்தம் பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது:

கடுமையான மன அழுத்தம்: மன அழுத்த சூழ்நிலை சிறிது நேரம் நீடிப்பு. பெரும்பாலான மக்கள் ஒரு குறுகிய உணர்ச்சி, அதிர்ச்சிக்குப் பிறகு விரைவாகத் திரும்புவார்கள். இருப்பினும், அதிர்ச்சி வலுவாக இருந்தால், என்யூரிசிஸ், திணறல், நடுக்கங்கள் போன்ற NS இன் செயலிழப்புகள் சாத்தியமாகும்.

நாள்பட்ட மன அழுத்தம்: மன அழுத்த காரணிகள் ஒரு நபரை நீண்ட நேரம் பாதிக்கின்றன. இந்த நிலைமை இருதய அமைப்பின் நோய்களின் வளர்ச்சிக்கும், தற்போதுள்ள நாட்பட்ட நோய்களின் அதிகரிப்புக்கும் காரணமாக அமைகின்றன.

மன அழுத்தத்திற்கு தீர்வு காணும் வழிமுறைகளாக பின்வரும் விடயங்களை முன்வைக்கலாம்.

அதிகம் யோசிக்காதீர்கள்: உங்கள் பதற்றத்திற்கு பின்னால் ஒளிந்திருக்கும் காரணத்தை கண்டுபிடிக்க யோசித்தால், கண்டிப்பாக ஏதாவது ஒரு காரணம் உங்கள் நினைவுக்கு வரும். வேலை செய்பவர்களுக்கு வேலையை நினைத்து பதற்றம். பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளின் படிப்பை நினைத்து கவலை. மேல் படிப்பு படிப்பவர்களுக்கு எதிர்காலத்தில் பெரிய அளவில் சாதிக்க வேண்டும் என்ற சிந்தனை. இப்படி ஏகப்பட்ட விடயங்களை சொல்லலாம். எனவே எந்த விடயத்திற்கும் பதற்றம் அடையாமல் இருக்க முயற்சி செய்யுங்கள்.

மகிழ்ச்சியாக இருங்கள்: மகிழ்ச்சியாக இருப்பது பல பிரச்சினைகளைச் சரிசெய்யும். சுற்றுப்புறத்தை அமைதியாகவும் சாந்தமாகவும் வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்.

சண்டையை தவிர்த்திடுங்கள்: சண்டை போடும் போது மன அழுத்தம் அதிகமாகிறது. அதனால் சண்டை வருவதற்கான ஒவ்வொரு காரணத்தையும் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். ஒருவேளை சண்டை வந்துவிட்டால், அந்த நேரத்திலும் நிதானமாக சிந்தித்து செயற்பட முயற்சி செய்யுங்கள்.

உடற்பயிற்சி செய்யுங்கள்: பலரும் காலையில் எழுந்த உடனே, முதலில் உடற்பயிற்சி செய்ய விரும்புகிறார்கள். இதற்கு பின்னால் இருக்கும் காரணம் மன அழுத்தத்தை விரட்டுவது தான். ஹோவர்ட் பல்கலைக்கழகம் உட்பட பல ஆராய்ச்சிகளில், தினமும் சிறிது நேரம் உடற்பயிற்சி செய்வதன் மூலம் நம் உடலையும் மனதையும் முற்றிலும் அமைதியாக வைத்திருக்க முடியும் என்பது தெரிய வந்துள்ளது.

**அடுத்து என்ன நடக்கும் என்பதைப் பற்றி சிந்திப்பதை நிறுத்திவிட்டு, நிகழ்காலத்தில் நடப்பதை இரசித்து அனுபவித்து வாழத் தொடங்குங்கள். இதுவே மன அழுத்தத்தை குறைக்கும் மிகச் சிறந்த வழி. மன அழுத்தம் இல்லாத மனிதர்கள் எவரும் இல்லை. ஆனால், அவற்றை சாதகமாக கையாளத்தொடங்குவோமானால் அவையே எம்வாழ்வுக்கு உதவியாக அமையும்**

பிடித்ததை செய்யுங்கள்: சில நேரங்களில் நாம் சில வேலைகளை செய்த பிறகு நன்றாக உணர்வோம். அத்தகைய சூழ்நிலையில், மனதை நன்கு உணர வைக்கும் வேலைகளை நீங்கள் அடிக்கடி செய்யுங்கள். பிடித்த திரைப்படங்களை பார்த்து இரசியுங்கள். இதுபோல் பிடித்த விடயங்களை செய்வதன் மூலமும் மன அழுத்தத்தை குறைக்கலாம்.

தியானம் 10 நிமிடங்களுக்கு, வாரத்தில் பல முறை தியானம் செய்வது பதட்டத்தின் அளவையும் மன அழுத்த சூழ்நிலைகளுக்கு எதிர்வினை அளவையும் குறைக்கிறது. இது ஆக்கிரமிப்பின் அளவையும் குறைக்கிறது. இது மன அழுத்த சூழ்நிலையில் ஆக்கபூர்வமான தகவல்தொடர்புக்கு பங்களிக்கிறது.

மன அழுத்தம் மனித வாழ்வின் ஒரு அங்கம். அவற்றை முற்றிலுமாக அகற்றுவது சாத்தியமில்லை. ஆனால், ஆரோக்கியத்தில் அவற்றின் தாக்கத்தை குறைக்க முடியும்.

அடுத்து என்ன நடக்கும் என்பதைப் பற்றி சிந்திப்பதை நிறுத்திவிட்டு, நிகழ்காலத்தில் நடப்பதை இரசித்து அனுபவித்து வாழத் தொடங்குங்கள். இதுவே மன அழுத்தத்தை குறைக்கும் மிகச் சிறந்த வழி. மன அழுத்தம் இல்லாத மனிதர்கள் எவரும் இல்லை. ஆனால், அவற்றை சாதகமாக கையாளத்தொடங்குவோமானால் அவையே எம்வாழ்வுக்கு உதவியாக அமையும்.

# இரு மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள் விநியோகம்



நவலோக குழுமத்தின், கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள நவலோக கொலேஜ் ஒஃவ் ஹையர் ஸ்டடிஸ் நிலையங்களுக்கு, அவற்றின் வலுத் தேவைகளை நிர்வகித்துக் கொள்வதற்காக, இரண்டு மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்களை, ஐடியல் மோட்டர்ஸ் விநியோகித்துள்ளது.

தற்போது மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள் 28 மாதிரிகளில் கிடைக்கின்றன. அவை 5 KVA முதல் 625 KVA வரையில் அமைந்திருப்பதுடன், அவற்றை கவர்ச்சிகரமான விலையில், நாடு முழுவதிலும் காணப்படும் ஐடியல் மோட்டர்ஸ் கிளை வலையமைப்பிலிருந்து கொள்வனவு செய்து கொள்ள முடியும். பவரோல் ஜெனரேற்றர்களில், மஹிந்திரா என்ஜின் காணப்படுவதுடன், Leroy-Somer எனும் புகழ்பெற்ற ஐரோப்பிய தொழில்நுட்பத்தினூடாக வலுப் பிறப்பாக்கல் அலகு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், மஹிந்திரா பவரோலில் உலகத் தரம் வாய்ந்த DPC (Digital Power Control) பயன்படுத்தப்படுவதால், சிறந்த எரிபொருள் சிக்கனம், குறைந்த கசிவுகள் மற்றும் தங்கியிருக்கக்கூடிய வலு வெளியீட்டை வழங்குகின்றன.

சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பவரோல் ஜெனரேற்றர்கள் பல்வேறு வகைகளில் அமைந்துள்ளன. சௌகரியமானதும் அளவில் சிறியதாகவும் அமைந்துள்ள 5 KVA ஒற்றை கட்டமைப்பு ஜெனரேற்றர், 10 KVA முதல் 30 KVA ஒற்றை கட்டமைப்பு ஜெனரேற்றர், 10 KVA முதல் 625 KVA மூன்று கட்டமைப்பு ஜெனரேற்றர் போன்றன அடங்குகின்றன.

2017 இல், மஹிந்திரா பவரோல் டீசல் ஜெனரேற்றர்களை நாட்டில் விநியோகிக்கும் ஏக உரிமை, ஐடியல் மோட்டர்ஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. அன்று முதல், பாரியளவு மற்றும் சிறியளவு நிறுவனங்களின் வலுத் தேவைகளை நிவர்த்தி செய்வதில் மஹிந்திரா பவரோல் பிரதான பங்களிப்பு வழங்குநராக அமைந்துள்ளதுடன், இதுவரையில் இலங்கையின் ஜெனரேற்றர் சந்தையில் சந்தை முன்னோடி எனும் கீர்த்தி நாமத்தையும் பெற்றுள்ளது.

ஐடியல் குழுமத்தின் பவரோல் தயாரிப்பின் சிரேஷ்ட முகாமையாளர் ஜனக குலதுங்க, மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள் பற்றி தெரிவிக்கையில், “மஹிந்திரா பவரோல் தயாரிப்புகள், இலங்கையில் காணப்படும் இந்திய ஜெனரேற்றர் தயாரிப்புகள் வரிசையில் முன்னோடி ஸ்தானத்தைப் பெற்றுள்ளன. எமது சிறந்த விற்பனைக்கு பிந்திய சேவையினூடாக, குறுகிய காலப்பகுதியில் எம்மால் இந்தப் பிரத்தியேகமான வெற்றிச் சாதனையை எய்த முடிந்ததையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். மேலும், உலகளாவிய ரீதியில் நுகர்வோர்கள் மத்தியில் அதிகளவு வரவேற்பையும் நன்மதிப்பையும் வென்ற நாமமாக மஹிந்திரா பவரோல் திகழ்கின்றது. தற்போது, மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்களால், பல்வேறு உற்பத்தியாளர்கள், தொழிற்சாலைகள், ஹோட்டல்கள், வங்கிகள், சேவை நிலையங்கள் என்பவற்றுக்கு ஜெனரேற்றர்கள் விநியோகிகப்பட்டுள்ளன” என்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், “குறிப்பாக, மஹிந்திரா டீசல் ஜெனரேற்றர்கள் குறைந்த சத்தத்தில் இயங்குகின்றன. உயர் எரிபொருள் சிக்கனத்தை வழங்குவதுடன், பல வருட காலம் சிக்கல்களின்றி இயங்கும் உத்தரவாதத்தை வழங்குகின்றன. குறுகிய காலப்பகுதிக்குள், மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள் வாடிக்கையாளர்கள் மத்தியில் அதிகளவு பிரபல்யமடைந்துள்ளன. ஐடியல் மோட்டர்ஸ் நிறுவனத்தால் வழங்கப்படும் சிறந்த வாடிக்கையாளர் மற்றும் விற்பனைக்கு பிந்திய சேவை போன்றவற்றால், பெருமளவு வாடிக்கையாளர்கள் கவர்ந்திழுக்கப்பட்டுள்ளனர் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். சிறந்த வாடிக்கையாளர் சேவையைப் பெற்றுக் கொடுக்க எம்மை அர்ப்பணித்துள்ளோம். நாடு முழுவதிலும் காணப்படும் எமது 15 ஐடியல் ஃபஸ்ட் சொய்ஸ் சேவை நிலையங்களினூடாகவும், வாடிக்கையாளர்களின் தேவைகளின் அடிப்படையில், வினைத்திறனான சேவைகள் வழங்கப்படுவதுடன், சகாய கட்டணங்களில் பெருமளவு சௌகரியமும் சேர்க்கப்படுகின்றன. எமது வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் நலன்புரிச் செயற்பாடுகளை முன்னுரிமையளிக்கும் வகையில், அவர்களின் பெறுமதியான நேரத்தை சேமித்துக் கொள்ளக்கூடிய வகையில், அவசியமான உதிரிப் பாகங்களை ஐடியல் மோட்டர்ஸ் ஊடாக பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளையும் வழங்குகின்றோம்” என்றார்.

நியூயோர்க்

# இந்தியாவில் 41.5 கோடி பேர்

## வறுமையிலிருந்து மீண்டனர்

வறுமை ஒழிப்பில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது என்றும், கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் 41.5 கோடி பேர் வறுமையிலிருந்து மீண்டுள்ளனர் என்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச வறுமைக் குறியீட்டு அறிக்கையில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. யுஎன்டிபி எனப்படும் ஐ.நா வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இணைந்து இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளன.

இந்தியாவில் வறுமை நிலைவரம் தொடர்பாக 2005/2006 முதல் 2019/2021 வரையிலான 15 ஆண்டு காலத்தில் திரட்டப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்தியா உட்பட 25 நாடுகள் கடந்த 15 ஆண்டுகளில் வறுமை ஒழிப்பில் முன்னேற்றம் கண்டுள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்போடியா, சீனா, காங்கோ, ஹொண்டூராஸ், இந்தோனேசியா, மொராக்கோ, செர்பியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகள் இந்தப் பட்டியலில் அடங்குகின்றன.

ஐ.நா புள்ளிவிவரத்தின்படி, கடந்த ஏப்ரல் மாதம்



மக்கள் தொகையில் சீனாவை இந்தியா விஞ்சியது. இந்திய மக்கள் தொகை தற்போது 142.86 கோடி என்றளவில் உள்ளதாக ஐ.நாவின் அண்மை அறிக்கை தெரிவிக்கின்றது. அதன்படி, ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2005இல் 44.3% ஆக இருந்த நிலையில் 2019/2021-ல் 11.8 சதவீதமாகக் குறைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

மகாராஷ்டிரா

# அத்துமீறிய கொடூர வைத்தியர்

மகாராஷ்டிரா மாநிலம், தானே மாவட்டம், பதல்பூர் அருகே வசிக்கும் 23 வயது இளம்பெண் சற்றே மனநலம் பாதிக்கப்பட்டவராவார். இந்நிலையில், இந்தப் பெண் சில மருந்துப் பொருட்களை வாங்க மருத்துவ சிகிச்சை நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

பெண் வீட்டை விட்டு சென்று நேரமாகியும் திரும்பாததால், அவரின் தாய்க்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இளம்பெண்ணை அவரது தாயாரும் அக்காவும் அக்கம் பக்கத்தில் தேடி பார்த்தனர். அப்போது 35 வயதான வைத்தியரின் சிகிச்சை நிலையத்துக்கு வெளியே இளம்பெண்ணின் செருப்புகள் இருந்துள்ளன. இதையடுத்து உள்ளே சென்று பார்த்தபோது, அவர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மனநலம் பாதிக்கப்பட்ட அந்த இளம்பெண்ணை வைத்தியர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கியுள்ளார். உடனடியாக, பெண்ணை மீட்ட குடும்பத்தார் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். அதன் பேரில் மருத்துவரை பொலிஸார் கைது செய்தனர்.

# கழுத்தை அறுத்து கொன்று விடுவார்கள்

பாகிஸ்தானைச் சேர்ந்த சீமாவும் இந்தியாவை சேர்ந்த சச்சின் மீனா என்ற இளைஞரும் பப்ஜி விளையாட்டு மூலம் 2019ஆம் ஆண்டு அறிமுகமாகியுள்ளனர்.

இந்த விளையாட்டு மூலம் இருவருக்கும் காதல் ஏற்பட்ட நிலையில், பாகிஸ்தானை விட்டு வெளியேறி, இந்தியா வந்து காதலன் சச்சினுடன் வாழ அதிரடி முடிவெடுத்தார் சீமா. அதன்படி, நேபாளம் வழியாக கடந்த மே மாதம் இந்தியா வந்த சீமா, கிரேட்டர் நொய்டா பகுதியில் வசிக்கும் சச்சினுடன் சேர்ந்து வாழத் தொடங்கினார். தன்னுடன் தனது 4 குழந்தைகளையும் இவர் அழைத்து வந்துள்ளார்.

இந்நிலையில், சீமாவின் கணவன், தனது மனைவியை பாகிஸ்தானுக்கு அனுப்புமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு



கடிதம் அனுப்பியுள்ளார்.

“பாகிஸ்தானுக்கு என்னை திருப்பி அனுப்பினால் அங்கு கழுத்தை அறுத்து கொலை செய்து விடுவார்கள். என்னால் அங்கு செல்ல முடியாது. சச்சின் எனக்கு மரியாதை தருகிறார். குழந்தைகளை அன்புடன் நடத்துகிறார். பணம் இருந்தாலும் மதிப்பு தராத நபருடன் எப்படி சேர்ந்து வாழ்வது” என சீமா தெரிவித்தார்.

மேலும் பாகிஸ்தானில் உள்ள தனது நிலத்தை ரூ.12 இலட்சத்திற்கு விற்று இந்தியா வந்ததாக சீமா கூறியுள்ளார்.

பியோங்யாங்


# கடும் விளைவை சந்திக்க நேரும்

## அமெரிக்காவுக்கு வடகொரியா எச்சரிக்கை

அணு ஆயுதங்களை தாங்கிச்செல்லும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து, உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா - தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக எல்லை தொடர்பாக மோதல் பிரச்சினை நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாகக் கருதும் தென் கொரியாவையும் அமெரிக்காவையும் சீண்டும் வகையில், வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது.

இதுதொடர்பாக, வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னின் சகோதரி கிம் யோ ஜாங் கூறுகையில், வடகொரியாவின் கிழக்கு வான்வெளியில் அமெரிக்க உளவு விமானம் இரண்டு முறை அத்துமீறி நுழைந்தது. அமெரிக்க இராணுவம் அதன் கடல்சார் இராணுவ எல்லைக் கோட்டை தாண்டினால் தீர்மானமான நடவடிக்கை எடுக்கப்படும். மீண்டும் அமெரிக்க உளவு விமானம் ஊடுருவினால் கடும் விளைவை சந்திக்கும் என்று எச்சரித்துள்ளார்.



இது குறித்து வடகொரிய தேசிய பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, எங்களது வான்வெளியில் அத்துமீறி நுழையும் அமெரிக்க உளவு விமானத்தை சுட்டு வீழ்த்துவோம். இதுபோன்ற சம்பவம் கிழக்கு கடலில் நடக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அமெரிக்காவால் வெறித்தனமாக அரங்கேற்றப்பட்ட வான் உளவு செயல்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

இலண்டன்

# காருக்குள் தாதி உடலுறவு; நோயாளி திடீரென மரணம்

இங்கிலாந்து நாட்டின் வேல்ஸ் நகரில் உள்ள மருத்துவமனையில் தாதியாக பணியாற்றி வந்தவர் பெனலோப் வில்லியம்ஸ் (வயது 42). இவர் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவருடன் இரகசிய உறவை தொடர்ந்துள்ளார்.

அவருடன், மருத்துவமனையின் பின்புறம் கார்கள் நிறுத்தும் இடத்தில் கார் ஒன்றில் பாலியல் உறவு வைத்துள்ளார். இதில், அந்த நோயாளி உயிரிழந்து விட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு



ஆளானார். இதுபற்றி பொலிஸார் வில்லியம்சிடம் விசாரணை நடத்தினர்.

அதில், வில்லியம்ஸ் கூறும்போது, அந்த நோயாளி பேஸ்புக் வழியே உடல்நல பாதிப்பென செய்தி அனுப்பினார். அதன் பின்னரே அவரை பார்க்க சென்றேன். காரின் பின்புறம் 30 முதல் 45 நிமிடங்கள் மட்டுமே செலவிட்டேன். நாங்கள் பேசி கொண்டு இருந்தோம் என முதலில் கூறியுள்ளார்.

பொலிஸாரின் தீவிர விசாரணைக்கு பின்பே, அந்த நபருடன் இருந்த உறவு பற்றி அவர் கூறியுள்ளார். அந்த நோயாளியுடன் பாலியல் உறவில் இருந்து உள்ளார். அந்த நபர், உறவின்போது இதயம் செயலிழந்து மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்து உள்ளார்.

மூன்றாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# நியூசிலாந்தை தோற்கடித்த இலங்கை

நியூசிலாந்து பெண்கள் அணிக்கு எதிரான மூன்றாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியை இலங்கைப் பெண்கள் அணி வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் தோற்று தொடரை இழந்திருந்த இலங்கை, கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் அணித்தலைவி சாமரி அத்தப்பத்து வெல்ல, நியூசிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, அணித்தலைவி சோபி டெவினின் 46 (25), சுஸி பேட்ஸின் 37 (38) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், இனோகா ரணவீர 4-0-15-3, சுகந்திகா குமாரி 4-0-23-2, காவ்யா கவிந்தி 4-0-27-1 என்ற பெறுபேறுகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 141 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை,

Sri Lanka Cricket
தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

அத்தப்பத்தின் ஆட்டமிழக்காத 80 (47), ஹர்ஷிதா சமரவிக்கிரமவின் ஆட்டமிழக்காத 49 (40) ஓட்டங்களோடு 14.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகியாக அத்தப்பத்தும், தொடரின் நாயகியாக பேட்ஸும் தெரிவாகினர்.

# ஏ.சி மிலனுக்கு செல்வதை நெருங்கும் புலிசிச்



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனுக்குச் செல்வதை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியின் முன்களவீரரான கிறிஸ்டியன் புலிசிச் நெருங்கியுள்ளார்.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டிலிருந்து கடந்த 2019ஆம் ஆண்டு செல்சியில் இணைந்த 24 வயதான புலிசிச், 145 போட்டிகளில் 26 கோல்களைப் பெற்றுள்ளார்.



கேகாலை புனித மரியாள் வித்தியாலய

# கிரிக்கெட் வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு

சிவாணி ஸ்ரீ

கேகாலை புனித மரியாள் வித்தியாலத்தில் கல்வி கற்று கிரிக்கெட்டில் பங்குபற்றி வரும் பழைய மாணவர்களையும் மற்றும் மேற்படி பாடசாலையில் கல்வி கற்று ஓய்வு பெற்றுள்ள கிரிக்கெட் வீரர்களையும் கௌரவிக்கும் நிகழ்வானது வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கல்முனை அல் மிஸ்பாஹ்வின் பழைய மாணவர்களுக்கான

# கிரிக்கெட், கரப்பந்தாட்ட தொடர்

எம்.என். எம்.அப்ராஸ்

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களை பாடசாலையோடு மீண்டும் ஒன்றிணைக்கும் முகமாக கிரிக்கெட், கரப்பந்தாட்டத் தொடரின் அங்குரார்ப்பண நிகழ்வானது அண்மையில் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பாடசாலையில் நீண்ட காலமாக கடமையாற்றி ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் சமூகத்தினதும் மனதில் நீங்காத இடம்பிடித்த



மறைந்த பாடசாலையின் ஆசிரியர்களான மர்ஹூம் ஏ. ஹபீப் முஹம்மட், எம்.எஸ்.எம். ஷர்மில் ஆகியோரின் ஞாபகார்த்தமாக பாடசாலையின் பழைய மாணவர்களுக்கான ஏ. ஹபீப் முஹம்மட் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத் தொடர், எம்.எஸ்.எம். சர்மில் ஞாபகார்த்த கிரிக்கெட் தொடரின் ஆரம்ப அங்குரார்ப்பண நிகழ்வு அதிபர் அப்துல் ரசாக்கின் தலைமையிலும் பிரதி அதிபர் ஜின்னாவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

குறித்த ஏ. ஹபீப் முஹம்மட் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத் தொடர், எம்.எஸ்.எம். சர்மில் ஞாபகார்த்த கிரிக்கெட் தொடரில் 14 பழைய மாணவர்கள் அணிகள் பங்குபற்றுவதுடன், இறுதி நாள் நிகழ்வுகள் நாளை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# ஆப்கானிஸ்தானை வீழ்த்திய பங்களாதேஷ்

ஆப்கானிஸ்தானுக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்ற ஆப்கானிஸ்தான், சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் தோற்றபோதும் தொடரை 2-1 எனக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்: 126/10 (45.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 56 (71) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொரிஃபுல் இஸ்லாம் 4/21, தஸ்கின் அஹ்மட் 2/23, தஜியுல் இஸ்லாம் 2/33, ஷகிப் அல் ஹஸன் 1/13, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/35)

பங்களாதேஷ்: 129/3 (23.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் ஆ.இ 53 (60), ஷகிப் அல் ஹஸன் 39 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: பஸல்ஹக் பரூக்கி 2/26, மொஹமட் நபி 1/7)

போட்டியின் நாயகன்: ஷொரிபுல் இஸ்லாம்

தொடரின் நாயகன்: பஸல்ஹக் பரூக்கி

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 13 ஜூலை 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.